பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.27.03.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு மார்ச் மாதம் 28ம் நாள் ( 28.03.2018) காலை 10.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்:1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் பிப்ரவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் பிப்ரவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் பிப்ரவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் பிப்ரவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | **தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம். (தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்.25.01.2018)**<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில் நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br>தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் இரண்டாம் திருத்தம் சட்டம் 2018, (2018, தமிழ்நாடு சட்டம் – 6)ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)க்கு கீழ்கண்டவாறு சட்டத்திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.<br>**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920.**<br>5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in sub-section (1).<br>(1) for clause (c), the following clause shall be substituted, namely:<br>(c) building used for educational purpose including hostels and libraries, run by the government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallan women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council. |

Provided that the building used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax”

(2) in the proviso, for the Expression “clauses (a), (c) and (e) the expression “clauses (a) and (e) shall be instituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83 (1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்.

கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83 (1) (சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–208 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78 (3)ன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்கான ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது. மேற்படி பொருட்கள் தொடர்பான தமிழ்நாடு நாளிதழ் அறிவிப்பு 25.01.2018 மன்ற பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொருட்கள் தொடர்பான தமிழ்நாடு நாளிதழ் அறிவிப்பு 25.01.2018 மன்றம் பதிவு செய்யலாம்.
3. இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78 (3)ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விபரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யலாம்.
4. எனவே, மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின், அதனை குறிப்பிட்ட நாட்களுக்குள், எழுத்து மூலமாக ஆணையர், பரமக்குடி நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிப்பு செய்யலாம்.

ந.க.எண்.787/2018/அ1, நாள்.28.03.2018

| | |
|---|---|
| பொருள்.**6** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பள்ளிகளில் ஏற்கனவே 2017–18ம் நிதியாண்டில் கல்வி நிதியின் கீழ் 5 நகராட்சி பள்ளிகளில் தானியங்கி மணி மற்றும் பச்சை வண்ண மேக்னடிக் முலாம் பூசப்பட்ட எழுத்து பலகைகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது மீதமுள்ள நான்கு பள்ளிகளான எமனேஸ்வரம் துவக்கப்பள்ளி, மேலச்சத்திரம் துவக்கப்பள்ளி, மணிநகர் துவக்கப்பள்ளி மற்றும் காந்தி நகர் துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் தானியங்கி அழைப்பு மணிகள் அமைக்கவும், மேலும், மேற்படி பள்ளிகளில் மேக்னடிக் முலாம் பூசப்பட்ட எழுத்துப்பலகைகள் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.9.70 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**7** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் நடுநிலைப்பள்ளி, மணிநகர் தொடக்கப்பள்ளி, காட்டுப்பரமக்குடி தொடக்கப்பள்ளி, ஜீவா நகர் தொடக்கப்பள்ளி மற்றும் மேலச்சத்திரம் தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் மராமத்து பணிகள் செய்ய இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். நாள். ல் அனுமதி அளித்ததின் பேரில் 15.03.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.<br><br>1. திரு. ஆர். ஆறுமுகம், ஒப்பந்ததாரர், பரமக்குடி – 1.90 மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல்.<br>2. திரு. வி. மேகவர்ணம், ஒப்பந்ததாரர், பரமக்குடி – 0.07 மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. வி. மேகவர்ணம், ஒப்பந்ததாரர் பரமக்குடி அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.07 குறைவாக உள்ளதால் ஏற்றுக்கொண்டு அனுமதிக்கலாம். |
| பொருள்.**8** | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அம்மா உணவகத்தில் இயங்கி வரும் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் தயார் செய்யும் Double Jacket cap இரண்டும் முற்றிலும் உயர் அழுத்தத்தின் காரணமாக பழுதடைந்துள்ளது. இதனால் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் தயார் செய்வதில் சிரமம் உள்ளது. எனவே, மேற்படி Double Jacket cap இரண்டு எண்ணம் புதிதாக வாங்கி பொருத்தவும் மற்றும் அம்மா உணவகத்தில் ஏற்பட்டுள்ள இதர சில்லரை மராமத்துப்பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீடு ரூ.1.50 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.**9** | இந்நகராட்சியில் 2018–19ம் ஆண்டுக்கு கணினிகள் மற்றும் பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் பழுது நீக்கம் செய்வதற்கு வருடாந்திர பராமரிப்பு பணிக்கும், பராமரிப்பு பணிகள் தவிர பழுதடையும் உதிரிபாகங்கள் புதியது வாங்குவதற்கும் உத்தேச செலவு தொகை ரூ.190000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| பொருள்.10 | இந்நகராட்சிக்கு சொந்தமான பாம்புவிழுந்தான் காலனி பகுதியில் அமைந்துள்ள கலவை உரக்கிடங்கில் பிரித்தெடுக்கப்படாத பழைய கழிவுகளில் இருந்து பிளாஸ்டிக் கேரி பைகள் (RACKPICKERS) மூலம் சேகரம் செய்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. சமீபத்தில் தேவகோட்டை நகராட்சியில் பிளாஸ்டிக் கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படா வண்ணம் எரித்து குழாய்கள் மூலம் குளிர்வித்து எண்ணெய் தயார் செய்யும் Pyralisis plant நிறுவப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் கடந்த ஆய்வுக்கூட்டத்தின் போது மதுரை மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளில் இம்முறையில் அப்புறப்படுத்த அறிவுரை வழங்கி உள்ளார்கள். மேலும், இப்பணியினை உள்ளூர் CSR நிதியின் மூலம் பணிமேற்கொள்ளவும் அறிவுரை வழங்கி உள்ளார்கள். இதன்படி பைரோ இஞ்சினியரிங் கன்சல்டன்சி என்ற நிறுவனத்தினர் நேரில் பார்வையிட்டு பணிகள் மேற்கொள்ள உரிய அறிவுரை வழங்கி உள்ளார்கள் இதன் அடிப்படையில் மேற்படி கலவை உரக்கிடங்கில் உரம் தயார் செய்யும் கூடத்தில் Pyralisis plant அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், CORPERATE SOCIAL பிணி பெற்று ஈடு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.11 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள காமராஜர் நகர் மற்றும் பாரதியார் பூங்கா ஆகிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீரில் கேஸ் மூலமாக குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நீர்தேக்கத் தொட்டிகளில் தொடர்ந்து கேஸ் குளோரினேசன் செய்ய தேவையான கேஸ் சிலிண்டர்கள் 2018–19ம் ஆண்டுக்கு கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.12 | இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்குரிய பிரிண்டர்கள் அனைத்தும் பழுதடைந்து பராமரிப்பு செய்ய இயலாத நிலையில் உள்ளதால், அச்சுப்பிரதிகள் ஏதும் எடுக்க இயலாத நிலை உள்ளது. மேலும், 2018–19ம் நிதியாண்டு ஆரம்பிக்கப்பட்டுவிட்டதால் அ1 பிரிவில் நிலுவை மற்றும் நடப்பு நோட்டீஸ்களும், அ4 பிவில் குடிநீர் நிலுவை மற்றும் நடப்பு நோட்டீஸ்களும், பொதுசுகாதாரப்பிரிவில் பிறப்பு / இறப்பு சான்றிதழ்களும், வருவாய் பிரிவில் வசூல் மையத்திற்கு ஒரு பிரிண்டரும் வாங்க வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட விபரப்படி 4 எண்ணம் புதிய பிரிண்டர்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.13 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள சின்டெக்ஸ் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்ய ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்புகள் பழுதடையும் போது பராமரிப்பு பணிக்கு தேவையான 6 எண்ணம் 1.5HP மின்மோட்டார்கள் வாங்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.30.11.2017ம் ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் 12.01.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>1</td><td>திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர்</td><td>0.03% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திருமதி. வி. பால்கரசி, ஒப்பந்ததாரர்</td><td>2.27% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.03% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
</td></tr>
<tr><td>பொருள்.14</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்குகளுக்கு முதலீட்டு தர தணிக்கை தெருவிளக்கு அமைப்பு மற்றும் ஆற்றல் சேமிப்பு நடவடிக்கை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க M/s TUV SUD தெற்கு ஆசியா பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்திற்கு அரசு ஆணை எண்.39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.21.04.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.35871/2017/இ1, நாள்.27.04.2017 மற்றும் 04.05.2017ன்படி உத்தரவு வழங்கப்பட்டு 100 சதவீதம் ஆய்வுப்பணிகள் முடிவுற்றுள்ளதாகவும், மேற்படி பணிக்காக இந்நகராட்சி பங்குத்தொகையாக ரூ.473826/–ஐ செலுத்தக்கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் அலுவலக கடிதம் ந.க.எண்.2380/2017/பி3, நாள்.12.03.2018ல் தெரிவிக்கப்பட்டதன்படி மேற்கண்ட ஆய்வு பணிக்காக உரிய பங்களிப்பு தொகை ரூ.473826/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு –<br>
மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>இந்நகராட்சி பயன்பாட்டிற்கு 2017–18ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இராமநாதபுரம் மாவட்ட ராம்கோ கூட்டுறவு அச்சகம், காரைக்குடி மற்றும் சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு அச்சகம், கோவில்பட்டி, இராமநாதபுரம் மாவட்ட ராம்கோ கூட்டுறவு அச்சகங்களில் வாங்கிக்கொள்ள தேவையான உத்தேச செலவினம் ரூ.500000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.16</td><td>நகர்மன்ற தீர்மான எண்.338, நாள்.31.10.2017ன்படி இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் உள்ள உரம் தயாரிப்பு மையத்தில் உள்ள இயந்திரங்களை இயக்குவதற்குரிய தொழில்நுட்ப பணியாளர்களை அனுப்புதல் மற்றும் இயந்திரங்களை பழுதுப்பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து 28.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.</td></tr>
</table>

| Sl. No. | Particulars of work | Tender amount submitted from Totals Environment Solution, Erode. | Tender Amount submitted from Carvin Dinkum Engineering (p) Ltd., Chennai. |
| --- | --- | --- | --- |
| 1 | **Package – I** Supply of 4 skilled operators to operate the compost yard machineries at Paramakudi Municipality for the period of one year. The cost are inclusive of ESI and PF for 4 skilled operators. | Rs.7,90,000/- | Rs.8,00,000/- |
| 2 | **Package – II** AMC for compost yard machineries and providing project administractor for the period of one yar to Paramakudi Municipality. | Rs.6,59,000/- | Rs.6,80,000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கலவை உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் மையத்தில் இயந்திரங்களை இயக்குவதற்குரிய தொழில்நுட்ப பணியாளர்களை அனுப்புதல் மற்றும் இயந்திரங்களை பழுதுப்பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Totals Environment Solution, Erode என்ற நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் 22.01.2018ம் தேதிய முன் அனுமதியின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Totals Environment Solution, Erode என்ற நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் 22.01.2018ம் தேதிய முன் அனுமதியின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை சம்மந்தமான நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.96/2016/எச்2

**பொருள்.17**

நகர்மன்ற தீர்மான எண். நாள்.22.12.2017ன்படியும், அலுவலக உத்தரவின்படியும் இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் புதிதாக வாங்கப்பட்டுள்ள வாகனங்களை இயக்குவதற்கான 10 ஓட்டுநர்களை Clean care service centre, Madurai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்று துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு உத்தரவு காலம் வருகின்ற 31.03.2018ம் உடன் முடிவடைகின்றது.

மேலும், புதியதாக ஒப்பந்தப்புள்ளிக்கோரி பணி மேற்கொள்ளும் வரை தற்போது பணி செய்து வரும் Clean care service centre, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.04.2018 முதல் 30.06.2018 வரை மேலும் 3 மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்திற்கு பணிநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தற்போது பணி செய்து வரும் Clean care service centre, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.04.2018 முதல் 30.06.2018 வரை மேலும் 3 மாத காலங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள பணிநீட்டிப்பு உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1948/2015/எச்2 |
| பொருள்.18 | பரமக்குடி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ஏ.ராமச்சந்திரன் என்பவர் பணியிடைக் காலத்தில் கடந்த 16.10.2016 அன்று மரணமடைந்துவிட்டார். அன்னாரின் வாரிசும், மனைவியுமாகிய திருமதி. ஆர். முத்துராக்கு என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கும் பொருட்டு, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4433/2016/எச்1, நாள்.09.06.2017ன் வழியாக குடும்ப ஓய்வூதியக் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட்டதில், உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களின் மூ.மு.எண்.18739/நஓச(6)/2017, நாள்.03.10.2017ம் தேதிய கடிதத்தில், பணியிடைக் காலமான துப்புரவுப் பணியாளர் திரு. ஏ. ராமச்சந்திரன் என்பவரின் பணிநியமனம் தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு W.P.No.22919/2003 மற்றும் W.P.M.P.No.28326/2003ல் அளிக்கப்பட்ட 25.10.2010 நாளிட்ட தீர்ப்பாணையில் “the petitioners are granted the time scale of pay with all other monetary benefits due to them in accordance with law” என்று தீர்ப்பளிக்கப்பட்டதின்படி, அன்னாருக்கு 20.12.2000 முதல் காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, அதற்கான பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும், காலஞ்சென்ற இப்பணியாளருக் ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பலன்கள் (Pensionary Benefits) வழங்குவது தொடர்பாக மேற்கண்ட தீர்ப்பாணையில் ஏதும் குறிப்பிடாத நிலையில், வாரிசுதாரருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக அரசு வழக்கறிஞரின் சட்ட கருத்துரு (Legal Opinion) பெற்று அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி திருமதி. ஆர். முத்துராக்கு க/பெ. ராமச்சந்திரன் (லேட்) என்பவருக்கு குடும்ப ஓய்வூதியப்பயன்கள் வழங்க, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் அரசு கூடுதல் வழக்குரைஞரிடம் சட்ட கருத்துரு (Legal Openion) பெற்றதற்காக, வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/–ற்கான பட்டியல் திரு. எம். கண்ணன், நகராட்சி வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.10000/–யை திரு. எம். கண்ணன், நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியிடைக் காலமான துப்புரவுப் பணியாளரின் வாரிசுக்கு குடும்ப ஓய்வூதியம் பெற்று தருவது இந்நகராட்சியின் பொறுப்பாக இருப்பதால் சட்டக் கருத்துருவிற்கான கட்டணத்தை வழங்கலாம். மேலும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம். |
| பொருள்.19 | இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் திரு. எஸ். ராஜேந்திரன் என்பவர் அன்னார் பணியில் சேர்ந்த 18.12.1991 முதல் 20.12.2017 முடிய 26 ஆண்டுகள் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாக பணியாற்றியமைக்கு அரசாணை எண்.222 நிதி மற்றும் (ஊ.கு) நாள்.01.07.2013ன்படி ரூ.2000/– ரொக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கக்கோரி விண்ணப்பம் செய்துள்ளார். எனவே, அரசாணையில் தெரிவித்துள்ளபடி அன்னாருக்கு ரொக்கம் ரூ.2000/–ம் மற்றும் சான்றிதழ் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.20 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 22.03.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சொத்துவரி கேட்பிற்கு ஏற்றாற்போல் குடிநீர் இணைப்புகள் 31.07.2018ம் தேதிக்குள் வழங்கப்பட வேண்டும் என (Internel Plumping of Water Supply House Service Connection) அறிவிக்கப்பட்டதன்படி, பரமக்குடி நகராட்சியில் 31378 சொத்துவரி கேட்பின் எண்ணிக்கையின்படி, தற்பொழுது வரை10376குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 26.03.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சிக்கு கூடுதலாக 7000 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, மேற்கண்ட இணைப்புகளுக்கு ரூ.640.00 லட்சத்திற்கு மதீப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. <br><br> அலுவலகக் குறிப்பு– <br><br> மதிப்பீட்டுத் தொகை ரூ.640.00 லட்சத்தினை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று, மேற்கண்ட பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். <br> (ந.க.எண்.1039/2017/இ1) |
| பொருள்.21 | பரமக்குடி நகராட்சி உள்ளாட்சித் தேர்தல் 36 வார்டுகளின் எல்லைகளை மறுவரையறை செய்ய பிரேரணை அனுப்புமாறு சென்னை மறுவரையறை ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ.1, நாள்.19.10.2017 தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பரமக்குடி நகராட்சியில் 36 வார்டுகளின் எல்லைகளை மறுவரையறை செய்ய மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேற்படி மறுவரையறை பிரேரணை தயார் செய்ய கருத்துரு படிவங்கள், நகர வரைபடம், வார்டு வரைபடம் ஆகியவற்றை கணினியில் (Auto cad) தயார் செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.50,000/–ஐ அலுவலக பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது. தற்போது கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளதால் மேலும் ரூ.50,000/– செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. <br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.22 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 28வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2015–16ம் ஆண்டின் கீழ் புதிதாக கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பறைக்கு நச்சுத்தொட்டி, தண்ணீர் வசதிக்கான பைப்லைன் மற்றும் விளக்கு வசதி அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்படி கூடுதல் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.65 லட்சத்துக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு. <br> அலுவலகக்குறிப்பு <br> மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.23 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை மண்டபம் சாலை கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் எல்லை போர்டுகள் இல்லாமல் உள்ளது. எனவே, முதற்கட்டமாக மேற்கண்ட இரண்டு இடங்களில் எல்லைப்போர்டு அமைக்க உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். <br> 1. ஜாலி ஆர்ட், காந்திஜி ரோடு, பரமக்குடி – ரூ.16000/– (போர்டு ஒன்றுக்கு) <br> 2. பொதுவை சேதுஆர்ட்ஸ், பரமக்குடி – ரூ.17000/– |

| | |
|---|---|
| | 3. சூர்யா ஆர்ட்ஸ், பகவத்சிங் ரோடு, பரமக்குடி – ரூ.18000/– <br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட பணியை அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரி உத்தரவு வழங்கி பணிசெய்து முடித்ததையும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.24 | இந்நகராட்சியில் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் திடக்கழிவுகளை நகராட்சிக்கு சொந்தமான பாம்புவிழுந்தான் கிராமத்தில் உள்ள உரக்கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டு மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தற்போது வீடு வீடாக சென்று குப்பைகள் மற்றும் கழிவு பொருட்களை இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு சேகரம் செய்து முதல்நிலை சேகரிப்பு அடிப்படையில் பெற்று இரண்டாம் கட்டமாக அவற்றை நகராட்சி வாகனத்தின் மூலம் உரக்கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டு தரம் பிரிப்பதால் கால நேரம் விரயமாகி வருவதால் அந்தந்த பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை மட்டும் ஒரே இடத்தில் நுண்ம கூட்டுமையம் (Micro Compost Centre) அமைத்து கூட்டுபசன (Compost Manure) தயார் செய்து உரிய விலைக்கு விற்பனை செய்துகொள்ளலாம் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் முதல் கட்டமாக ஜீவா நகர், புதுநகர், உழவர்சந்தை, சுதந்திர தின பூங்கா, மஞ்சள்பட்டிணம் மயானம் ஆகிய இடங்களில் Micro Compost Centre அமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.25 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27ல் பாலன் நகர் பகுதியில தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சமுதாயக் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பறைக்கு நச்சுத்தொட்டி முகப்பு பகுதியில் பள்ளமாக உள்ளதால் அதனை சீர் செய்தும், மேலும், தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு ஆழ்துளைக் கிணறு அமைத்துள்ளதில் மின்மோட்டார் பொருத்தும் பணியும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, கழிப்பறையை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு கூடுதல் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.26 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 கீழப்பள்ளிவாசல் தெருவில் கழிவுநீர் கால்வாய் இல்லாததால் மழைக்காலங்களில் கழிவுநீர் தெருக்களில் தேங்கி சுகாதார சீர்க்கேட்டை ஏற்படுத்தி வருகிறது. மேலும், தெருக்களில் கழிவுநீர் தேங்கி போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்படி தெருவில் புதிதாக கழிவுநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.70 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.27.03.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு மார்ச் மாதம் 28ம் நாள் ( 28.03.2018) காலை 4.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டப் பொருள்கள்**

<table>
<tr><td>பொருள்:1</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் மேற்புறம் உள்ள கட்டண கழிப்பறையில் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஓராண்டிற்கு 14.03.2018ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம்</th><th>பொது ஏலக்கேள்வி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு. கே. நடராஜன், குத்தகைதாரர்</td><td>398500</td></tr>
<tr><td>2</td><td>திரு. ஏ. மூசாக்கனி, குத்தகைதாரர்</td><td>398000</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு –<br>
மேற்கண்ட இனத்திற்கு இரண்டு குத்தகைதாரர்கள் மட்டும் கலந்துகொண்டதில் வ.எண்.1 திரு. கே. நடராஜன் என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.398500/–க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.358843/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.386978/–ஐ காட்டிலும் திரு. கே. நடராஜன் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.398500/– கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்.2721/2017/சி2</td></tr>
<tr><td>பொருள்.2</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஓராண்டிற்கு 14.03.2018ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம்</th><th>பொது ஏலக்கேள்வி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு. கே. முருகன், குத்தகைதாரர்</td><td>412000</td></tr>
<tr><td>2</td><td>திரு. வி. கருப்பணன், குத்தகைதாரர்</td><td>412500</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்கண்ட இனத்திற்கு இரண்டு குத்தகைதாரர்கள் மட்டும் கலந்துகொண்டதில் வ.எண்.2 திரு. வி. கருப்பணன் என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.412500/–க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.358843/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.386978/–ஐ காட்டிலும் திரு. வி. கருப்பணன் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.412500/– கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்.2721/2017/சி2</td></tr>
</table>

| | |
|---|---|
| பொருள்.3 | இந்நகராட்சிக்கு சொந்தமான எமனேஸ்வரம் தெரு ஓரங்களில் விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஓராண்டிற்கு 14.03.2018ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம் | பொது ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. கே. ஏ. பாண்டித்துரை, குத்தகைதாரர் | 112000 |
| 2 | திரு. ஏ. மூசாக்கனி, குத்தகைதாரர் | 111000 |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்ட இனத்திற்கு இரண்டு குத்தகைதாரர்கள் மட்டும் கலந்துகொண்டதில் வ.எண்.1 திரு. கே. ஏ. பாண்டித்துரை என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.112000/–க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.97202/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.101981/–ஐ காட்டிலும் திரு. கே.ஏ.பாண்டித்துரை என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.112000/– கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2721/2017/சி2

| | |
|---|---|
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட சின்னக்கடைத் தெருவில் தெரு ஓரம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஓராண்டிற்கு 14.03.2018ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற விபரங்களை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம் | பொது ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. வி. சசிவர்ணம், குத்தகைதாரர் | 153000 |
| 2 | திரு. எம். சுப்பிரமணியன், குத்தகைதாரர் | கேள்வி இல்லை |
| 3 | திரு. என். தத்து, குத்தகைதாரர் | 152000 |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்ட இனத்திற்கு திரு. பி. சசிவர்ணம் என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.153000/–க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.127361/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.133623/–ஐ காட்டிலும் திரு. பி. சசிவர்ணம் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.153000/–ம் கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2721/2017/சி2

| | |
|---|---|
| பொருள்.5 | இந்நகராட்சிக்கு சொந்தமான அனைத்து தெரு ஓரங்களில் விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (அங்காளம்மன் கோவில் தெரு மற்றும் முத்தாலம்மன் கோவில் தெரு நீங்களாக) உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஓராண்டிற்கு 14.03.2018ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற விபரங்களை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம் | பொது ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. பி. சசிவர்ணம், குத்தகைதாரர் | 525500 |
| 2 | திரு. வி. சேகர், குத்தகைதாரர் | 524000 |

அலுவலகக்குறிப்பு –

மேற்கண்ட இனத்திற்கு திரு. பி. சசிவர்ணம் என்பவர் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.525500/—க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.448706/— மற்றும் சென்றாண்டு தொகை ரூ.470768/—ஐ காட்டிலும் திரு. பி. சசிவர்ணம் என்பவர் கோரிய உச்ச ஏலக்கேள்வி கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2721/2017/சி2

**பொருள்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் நுழைவுக் கட்டணம் வசூல் செய்தல் மற்றும் சந்தையில் சேரும் மாட்டுச்சானத்தை அப்புறப்படுத்திக்கொள்ளும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018—2019) ஓராண்டிற்கு 28.03.2018ம் தேதி மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம் | பொது ஏலக்கேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு. பி. சசிவர்ணம், குத்தகைதாரர் | இல்லை | 1150000 |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி இனத்திற்கு 14.03.2018, 22.03.2018 மற்றும் 28.03.218 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்தில் யாரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. மூன்றாவது பொது ஏலத்தில் திரு. பி. சசிவர்ணம் என்பவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1150000/—த்திற்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.937343/— மற்றும் சென்றாண்டு தொகை ரூ.983430/—ஐ காட்டிலும் திரு. பி. சசிவர்ணம் என்பவர் கோரியுள்ள உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1150000/—ம் கூடுதலாக உள்ளது. மேலும், மூன்று முறை பொது ஏலம் கோரியும் பொது ஏலத்தில் கலந்துகொள்ள எவரும் முன்வரவில்லை. எனவே, மேற்படி உரிமம் மூன்றாவது அழைப்பு என்பதாலும், கூடுதலாக உள்ளதாலும் மூன்றாண்டு குத்தகை தொகையைவிட கூடுதலாக உள்ளதாலும், சராசரியை காட்டிலும் திரு. பி. சசிவர்ணம் என்பவர் கோரியுள்ள தொகையை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2721/2017/சி2

<table>
<tr><td>பொருள்.7</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் பழம், பூ மற்றும் தின்பண்டங்கள் தட்டில் வைத்து விற்பனை செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2018ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஓராண்டிற்கு 28.03.2018 மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிய விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வரப்பெற்ற குத்தகைதாரரின் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு. கே. ஏ. பாண்டித்துரை, குத்தகைதாரர்</td><td>210000</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்படி இனத்திற்கு 14.03.2018, 22.03.2018 மற்றும் 28.03.2018ம் தேதிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்தில் கலந்துகொள்ள எவரும் முன்வரவில்லை. மூன்றாவது பொது ஏலத்தில் திரு. கே. ஏ. பாண்டித்துரை என்பவர் ஒருவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.210000/– கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.139675/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.19900/–ஐ காட்டிலும் திரு. கே. ஏ. பாண்டித்துரை என்பவரது உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.210000/– கூடுதலாக உள்ளது. மேலும் மூன்று முறை பொது ஏலம் கோரியும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வராததினாலும் மேற்படியரது ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாகவும் மூன்றாவது அழைப்பு என்பதாலும் மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்.2721/2017/சி2</td></tr>
<tr><td>பொருள்.8</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான வ.எண்.1 தினசரி காய்கறி சந்தையில் (மீன்கடைத் தெருவில்) நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வ.எண்.2 மீன் இறைச்சி சந்தையில் நழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 14.03.2018, 22.03.2018 மற்றும் 28.03.2018 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்.ள்ளி கோரியதில் யாரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வரவில்லை.<br>
மேலும், மீன்வளர்த்துறை, சென்ன்ன அரசாணை G.O.(ms) No. 104, நாள்.21.07.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், செனை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2909/2016/இ3, நாள்.13.10.2016ன்படி ரூ.100.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன மீன் மார்க்கெட் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் அங்கு நடைபெற்று வந்த மேற்கண்ட வ.எண்.1 மற்றும் 2, குத்தகை இனங்களை தற்காலிகமாக ரத்து செய்யவும் மேற்படி பணி முடிந்தவுடன் நவீன மீன்கடையுடன் கூடிய ஆண்டு குத்தகை இனங்கள் இரண்டையும் பொது ஏலம் மூலம் நடத்திக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களான வ.எண்.1 மற்றும் 2ஐ நவீன மீன்கடை பணி நடைபெற்றுவருவதால் பணிமுடிந்து மீன்கடைகள் பொது ஏலம் நடைபெறும் வரை மேற்கண்ட 2 ஆண்டு குத்தகை இனங்களை தற்காலிகமாக கத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.9</td><td>இந்நகராட்சியில் 2016–17ம் ஆண்டு கணக்கு உள்ளாட்சி தணிக்கை கணக்குகள் முடிக்க பட்டய கணக்கர் திரு. கே.ஆர்.கே. நாகராஜன் என்பவருக்கு பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி ஆகிய கணக்களை முடித்து பட்டியல் தயார் செய்து வழங்குவதற்கும், சம்மந்தப்பட்ட மூன்று கணக்குகளுக்கும் ஐந்து காப்பிகள் எடுப்பதற்கும் செலவு தொகை ரூ.35000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.10 | பரமக்குடி நகராட்சியில் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு ஒப்பந்ததாரா் மற்றும் பணியாளா்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகையை செலுத்தியதற்கு திரு.கே.ஆா்.கே.நாகராஜன் என்பவா் இணையதளத்தின் மூலம் (ETDS) செய்வதற்கு 2018–2019ம் ஆண்டிற்கான ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய செலவினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. <br><br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.11 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளின் ஓரங்களின் உள்ள பலன் தரும் மரங்ககளன் மேல்பலனை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமத்திற்கு 14.03.2018, 22.03.2018 மற்றும் 28.03.2018ம் தேதி பலமுறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் யாரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வராததாலும் பருவமழை பெய்யாததினால் கடும் வறட்சி நிலவுவதால் மேற்படி மரங்களின் மேல்பலனை அனுபவிக்க இயலாத காரணத்தினாலும் மேற்படி உரிமத்தினை தற்காலிகமாக ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br> அலுவலகக்குறிப்பு – <br> மேற்கண்ட குத்தகை உரிமத்தினை பருவமழை பெய்யாததினாலும் கடும் வறட்சி நிலவுவதாலும் தற்காலிகமாக ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம். <br> ந.க.எண்.2721/2017/சி2 |
| பொருள்.12 | இந்நகராட்சிக்கு சொந்தமான கழிவு நீா் புல்பண்ணை நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள கினியாபுல்லை அறுத்து விற்பனை செய்யும் உரிமத்திற்கு 14.03.2018, 22.03.2018 மற்றும் 28.03.2018ம் தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவா் மட்டும் பொது ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டுள்ளதால், மேற்கண்ட உரிமத்தின் முடிவு தன்மை ஏற்றுக்கொள்ள முடியாததினாலும், பருவமழை பெய்யாததினாலும் வறட்சி நிலவுவதால் மேற்கண்ட புல்பண்ணை இடத்தினை பாதுகாக்கும் பொருட்டு முள்வேலி அமைக்கப்பட்டு இந்நகராட்சி பராமரிப்பில் சீரமைக்கப்பட்டு கினியாபுல்லை நன்கு வளர செய்தும், காய்கறிகள் பயிா் செய்தும் நகராட்சியின் வருவாயினை அதிகரிக்க செய்யும் நோக்கத்தி இருப்பதால் மேற்படி குத்தகை இனத்தை ரத்து செய்து நகராட்சி பராமரிப்பில் இயங்கி வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக்குறிப்பு – <br> மேற்கண்ட உரிமத்தினை பருவமழை பெய்யாததினாலும் வறட்சி ஏற்பட்டுள்ளதினாலும் மேற்கண்ட இடத்தினை பாதுகாக்கும் பொருட்டு இந்நகராட்சி பராமரிப்பில் இயங்கி வர ஆண்டு குத்தகை இனத்திலிருந்து ரத்து செய்யவும் அலுவலக ரீதியாக பராமரிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.13 | இந்நகராட்சிக்கு சொந்தமான சி.எஸ்.எம்.போா்டிங் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆடடி சாலையில் வதை செய்யப்படும் ஆடுகளுக்கு ஆடு 1க்கு ரூ.50/– வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021ம் ஆண்டு முடிய உள்ள தொகுப்பு கால அளவிற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள அரசாணை நிலை எண்.181, நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை நாள்.19.09.2008 சிறப்பு குத்தகை நிபந்தனைகளின்படி (2018–2019) ஒராண்டிற்கு 28.03.2018ம் தேதியில் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விபரத்தினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பாா்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. <br> 1. திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரா் – ரூ.185000/– |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மேற்கண்ட இனத்திற்கு 14.03.2018, 22.03.2018ம் தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.03.2018ம் தேதி மூன்றாவது அழைப்பில் திரு. எஸ். சந்திரன் என்பவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.195500/– க்கு கோரியுள்ளார். இத்தொகை மூன்றாண்டு சராசரி தொகை ரூ.161215/– மற்றும் சென்றாண்டு தொகை ரூ.169995/–ஐ காட்டிலும் திரு. எஸ். சந்திரன் என்பவர் கோரியுள்ள தொகை ரூ.195500/– கூடுதலாக உள்ளது. மேலும், மேற்படி உரிமம் மூன்றாவது அழைப்பு என்பதாலும் கூடுதலான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி